கொபய்கனே பிரதேச சபை - 2024

---

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கொபய்கனே பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10(1) உப பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் கொபய்கனே பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	காணிகளின் நியாயமான பெறுமதி நிதிக்கூற்றுக்களில் காண்பிக்காமல் ஒரு காணி அலகு ஒன்று ரூபா 25 இற்கும் 100 இற்கும் இடையிலான பெறுமதியான பிரகாரம் 43 காணி அலகுகளின் கூட்டுப்பெறுமதி ரூபா 2,400 ஆக காணி மற்றும் கட்டிடங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	காணிகளின் பெறுமதி மதிப்பீடு மதிப்பீட்டுத் திணைக்களத்தை வரவழைத்து மேற்கொள்வதற்கு போதியளவான நிதியேற்பாடு சபையிடம் காணப்படாது இருந்ததுடன் உரிய நிதியேற்பாட்டை சேகரித்த பின்னர் இந்த பணிகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	சொத்துக்களின் நியாயமான பெறுமதியை நிதிக்கூற்றுக்களில் காண்பித்தல் வேண்டும்.
(ஆ)	மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் காணப்பட்ட வேலைகளின் கூட்டுமொத்தம் ரூபா 2,379,812 ஆக இருந்ததுடன் 37 வைப்புக்களின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.	வேலைகளின் 12 வைப்புகள் தற்போது தீர்த்து வைக்கப்பட்டுள்ளதுடன் மீதியாக உள்ள வைப்புக்கள் தொடர்பான விடயங்களை கண்டறிந்து தேவையான நடவடிக்கைகள் எதிர்காலத்தில் எடுக்கப்படும்.	வைப்புப் பெறுமதி சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும்.
(இ)	மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 475,445 கூட்டுத்தொகையான 14 சொத்து விடயங்கள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.	2025 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது நாட்குறிப்புப் பதிவுகளின் மூலம் சரி செய்யப்படும்.	சகல சொத்துக்களும் சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும்.

(ஈ)	சபைக்குச் சொந்தமான வான் வண்டி மீளாய்வாண்டில் புதிய எஞ்ஜின் மற்றும் கியர் பொக்ஸ் (Gear Box) ஒன்று பொருத்துவதற்காக செலவிடப்பட்ட ரூபா 1,747,075 தொகை மூலதனமாக்கப்பட்டிருக்க வில்லை.	2025 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது நாட்குறிப்புக்கள் மூலம் மூலதனமாக்கி சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	மூலதன செலவினங்கள் சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும்.
(உ)	மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு மலசலகூட உதவி வழங்குதல் ரூபா 245,040 கடன் கொடுத்தோர் மீதி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.	2025 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போ துநாட்குறிப்புக்களின் மூலம் சீராக்கி இந்த குறைபாடுகள் சரி செய்யப்படும்.	வேலைக் கடன் கொடுத்தோர் பெறுமதி சரியாக கணக்கு வைக்கப்படல் வேண்டும்.

1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு நிலுவை வருமானங்களில் பி.ச. 07 அறிக்கையின் பிரகாரம் மீதி மற்றும் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட நிலுவை ஆதனவரி, நிலுவை ஏக்கர் வரி, நிலுவை வாடகை மீதிகளுக்கு இடையே முறையே ரூபா 206,804 தொகை, ரூபா 2,313 மற்றும் ரூபா 833,460 வேறுபாடுகள் காணப்பட்டன.	பி.ச 07 அறிக்கையின் நிலுவை மீதியை கணிப்பீடு செய்த போது முற் பெறுவனவுகளும் உள்ளடக்கப்பட்டுள்ளது. இறுதிக் கணக்குகளுக்காக தகவல்கள் ஆதன வரி, எக்கர் வரி மற்றும் வாடகை பதிவேட்டை சமப்படுத்தி வழங்கப்பட்டுள்ளது. வழங்கப்பட்டுள்ள நிலுவைப் பதிவேட்டின் பிரகாரம் சரியாக இருந்தமையும் இறுதிக் கணக்குகளுக்காக வழங்கப்பட்டுள்ள வாடகை நிலுவைகளும் பதிவேட்டின் பிரகாரம் சரியாக இருந்ததைக் குறிப்பிடுகின்றோம்.	பி.ச 07 அறிக்கையின் படி நிலுவை வருமானம், நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள நிலுவை வருமானங்களில் சீராக்கப்படல் வேண்டும்.

1.6.3 கணக்காய்விற்கான எழுத்து மூல சான்றுகள் இன்மை

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
பட்டோலை, பட்டியல் மற்றும் தேவையான ஏனைய ஆவணங்கள் சமர்ப்பிக்காமையின் காரணமாக ரூபா 887,359 ஆன இரண்டு கணக்கு விடயங்கள் தொடர்பாக திருப்திகரமாக பரீட்சிப்பதற்கு முடியாது இருந்தது.	கருத்து தெரிவிக்கப்பட வில்லை.	மீதி உறுதிப்படுத்துவதற்காக எழுத்து சான்றுகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

1.7 இணங்காமைகள்

1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவவ தீர்மானங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

	சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடான தொடர்பு	இணங்காமைகள	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	1988 இன் பிரதேச சபைகள் நிதி மற்றும் நிர்வாக விதி விதி 218	2023 ஆம் ஆண்டின் போது வருடாந்த காணி மெய்மையாய்வு	2025 ஆம் ஆண்டு முடிவடைவதற்கு முன்னர் இந்த காணி	பிரதேச சபைகள் விதியின் பிரகாரம் நடவடிக்கை

	நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் மெய்மையாய்வு நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.	மெய்மையாய்வு நடவடிக்கைகளை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	எடுத்தல் வேண்டும்.
(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை நிதிப்பிரமாணம் 571	பெறுமதி ரூபா 889,969 ஆன காலாவதியான 15 வைப்புக்களை ஓய்வு பெறச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	இந்த வைப்புக்களுக்காக அரை ஆண்டு பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் மிகுதி நடவடிக்கைகள் 2025 ஆம் ஆண்டின் போது எடுக்கப்படும்.	நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ) 1980 ஏப்ரல் 01 ஆந் திகதி இலக்கம் 162 என்ற அரச நிர்வாகச் சுற்றறிக்கை 05 ஆம் பிரிவு	உத்தியோகத்தர்களின் நாளாந்த வருகை மற்றும் வெளிச் செல்கை மேற்பார்வை செய்வதற்காக போதியளவான மற்றும் பொருத்தமான திட்ட முறைமை ஒன்று ஸ்தாபிக்கப்பட்டு அமுல்படுத்தப்பட்டிருக்க வில்லை.	கைவிரல் அடையாள இயந்திரம் பயன்படுத்தப்படுவதுடன் அதன் அறிக்கை மற்றும் கையொப்ப பதிவேட்டின் பிரகாரம் உரிய தீர்மானங்கள் எடுக்கப்படுகின்றது. இந்த திட்ட முறைமையை தொடர்ந்தும் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2024 திசம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் வருமானத்தை விஞ்சிய செலவினம் (பற்றாக்குறை) ரூபா 13,267,522 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் வருமானத்தை விஞ்சிய செலவினம் (பற்றாக்குறை) ரூபா 9,379,462 ஆகும்.

2.2 வருமான நிர்வாகம்

2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

சபை செயலாளரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கும், முன்னைய ஆண்டிற்கும் உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

		2024				2023			
	வருமானமான மூலம்	மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்	சிட்டையிடப்பட்ட வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம்	திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை	மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்	சிட்டையிடப்பட்ட வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம்	திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை
		ரூபா ‘000	ரூபா ‘000	ரூபா ‘000	ரூபா ‘000	ரூபா ‘000	ரூபா ‘000	ரூபா ‘000	ரூபா ‘000
i.	ஆதன வரியும் வரியும்	2,297	719	623	257	2,262	2,566	2,184	383
ii.	வாடகை	4,556	5,110	4,945	51	5,015	3,832	3,779	54
iii.	அனுமதிப் பத்திரக் கட்டணம்	,1875	704	704	-	1,876	740	740	-
iv.	ஏனைய வருமானம்	29,619	10,873	10,830	44	30,269	24,723	24,629	94
	மொத்தம்	38,347	17,406	17,102	352	39,422	31,861	31,332	531

2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

வருமான சேகரித்தலின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மீளாய்வாண்டில் சேகரிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்ட வருமானம் ரூபா 38.35 மில்லியன் ஆக இருந்த போதும் திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் ரூபா 17.1 மில்லியனே சேகரிக்கப்பட்டிருந்தது. திட்டமிடப்பட்ட வருமானத்தில் அது 45 சதவீதம் மாத்திரம் ஆகும். அவ்வாறு மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் சிட்டையிடப்படாது இருந்தமையும் மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்தில் 50 சதவீத அளவு மாத்திரம் சிட்டையிடப்பட்டிருந்தமையும் வருமான சேகரித்தல் செயலாற்றல் மிகவும் கீழ் மட்டத்தில் காணப்படுகின்றமையும் அவதானிக்கப்பட்டது.	ஆதனங்களைத் தடை செய்யும் நிகழ்ச்சித் திட்டம் மற்றும் நிலுவை வருமானத்தை சேகரிக்கும் நிகழ்ச்சித் திட்டம் மூலம் இந்த நிலுவை வருமானத்தை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நிலுவை வருமானத்தை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	**வீதவரியும் வரியும்**		
	2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை ஆதனவரி மீதியான ரூபா 240,772 இல் ரூபா 128,963 அதாவது 54 சதவீதம் 05 வருடங்களுக்கு மேற்பட்ட பழைய மீதியாகும்.	2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 05 வருடங்களுக்கு மேற்பட்ட பழைய நிலுவைக்கு உரிய ஆதனங்களின் உரிமையாளர்களுக்கு 2025 மார்ச் 31 ஆந் திகதி வரையில் எழுத்து மூலம் இந்த நிலுவைப் பணத்தை செலுத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு செலுத்தாது	நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

		இருப்பவர்களுக்கு எதிர்காலத்தில் சிவப்பு அறிவித்தல் விநியோகித்து ஆதனங்கை தடை செய்யும் நடவடிக்கைகளை மேற்கொண்டு நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

3.1 சட்டத்தினால் கையளிக்கப்பட்டுள்ள பணிகளை நிறைவேற்றுதல்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
பிரதேச சபைகள் சட்டத்தின் 126 ஆம் பிரிவின் கீழ் 30 பிரதான விடயங்களை நிறைவேற்றுவதற்காக உப விதிகள் விதிக்க வேண்டியிருந்த போதிலும் 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரை சபையினால் 29 விடயங்களுக்காக உபவிதிகள் விதிக்கப்பட்டிருக்கவில்லை.	2011 யூன் 17 ஆந் திகதிய வர்த்தமாணியின் மூலம் 05 உப விதிகளும், கழிவுப் பொருள் முகாமைத்துவம் தொடர்பாக உபவிதி, மாநகர சபை/ நகர சபை/ பிரதேச சபை பொது நூலகங்களுக்கான உபவிதிகள் ஏற்று அமுல்படுத்தப்படும். மேலும் கோழி கைத்தொழிலின் காரணமாக ஏற்படுகின்ற பொதுமக்கள் பாதிப்புக்களை தடுத்தல் மற்றும் பொது சுகாதார பாதுகாப்பு உபவிதி உள்ளூராட்சித் திணைக்களத்திற்கு அங்கீகாரத்திற்காக அனுப்பபட்டுள்ளது. அதிகாரப் பிரதேசத்தின் தேவைகளின் பிரகாரம் மிகுதி உபவிதிகளையும் வழங்கி அங்கீகரித்து எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்.	உபவிதிகளை விதித்து அதிகார பிரதேசத்தில் நடவடிக்கைகளை முறைமைப் படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய 11 கணக்கு மீதிகளின் விடயங்களின் பெறுமதி ரூபா 55,569,936 ஆக இருந்ததுடன் அந்த மீதியில் 01 முதல் 05 வருடம் வரையிலான காலத்திற்கு உரிய ரூபா 55,265,149 மற்றும் 05 வருடங்களுக்கு மேற்பட்ட பழைய மீதி ரூபா 304,787 காணப்பட்டது. இந்த பணத்தை அறவிடுதல் தொடர்பில் முகாமைத்துவம் கவனம் செலுத்தியிருக்கவில்லை.	நிலுவை மீதிகள் இந்த வருடத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நிலுவை மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(ஆ)	மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளில் 08 விடயங்களின் கூட்டுப்பெறுமதி ரூபா 19,621,105 மற்றும் முற்பணப் பெறுவனவுகள் ரூபா 42,788 ஆக இருந்ததுடன் காலப்பகுப்பாய்வின் பிரகாரம் 04 கணக்கு விடயங்களுக்கு உரிய ரூபா 333,741 தொகை 05 வருடங்களுக்கு மேற்பட்ட பழைய மீதி ஆகும். சமர்ப்பிக்கப்பட்ட காலப் பகுப்பாய்வில் மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் உள்ளவாறு காணப்பட்ட இனங்காணப்படாத செலவினக் கடன் கொடுத்தோர் ரூபா 2,833,521 மற்றும் வேலைகள் 79,449 மறை மீதி காணப்பட்டது.	இனங்காணப்பட்ட கடன் மீதிகள் இந்த ஆண்டில் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	செலுத்த வேண்டிய மீதிகளை சரியாக இனங்கண்டு தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	காஹட்ட கஹமுல ஹென காணி கூறுகளாக்கப்பட்டு விற்பனை செய்யும் சபைக்கு கிடைக்க வேண்டிய பொதுக் காணிப் பகுதியில் 26.98 பேர்ச் குறைத்துக் கிடைத்ததன் காரணமாக அதற்குரிய பெறுமதி ரூபா 593,560 தொகை காசாக அறவிட்டு காணி உரிமையாளர்களுக்கு நலன் உரித்தாகும் வகையில் எந்த ஒரு பணிகளுக்கும் பயன்படுத்தப்படாமல் 2020 ஆம் ஆண்டு முதல் வைப்பாக வைக்கப்பட்டிருந்தது.	கஹட்ட கஹமுல ஹென கூறுகளாக்கப்பட்டு விற்பனை செய்யும் போது சபைக்கு உரித்தான காணிப்பகுதிக்காக அறவிடப்பட்ட ரூபா 593,560.00 தொகை வைப்பாக உள்ளதுடன் இந்த ஆண்டில் இந்தக் காணிக் கூறுகளில் குடியிருப்பவர்களுக்கு நலன்கள் உரித்தாகும் வகையில் நலன்புரி அலகு அபிவிருத்திப் பணிகளுக்காக ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	காணியில் குடியிருக்கின்ற நலனாளிகளின் நலன்களுக்காக உரிய நிதி ஈடுபடுத்தப்படல் வேண்டும்.
(ஆ)	மீளாய்வாண்டில் கழிவுப் பொருள் முகாமைத்துவத்திற்காக மீண்டெழும் செலவினம் ரூபா 7,544,063 மற்றும் மூலதன செலவினம் ரூபா 94,205 செலவிடப்பட்டிருந்த போதிலும் உக்குகின்ற மற்றும் உக்காத கழிவுப் பொருள் விற்பனையால் ரூபா 287,050 வருமானம் மாத்திரம் உழைக்கப்பட்டிருந்தது.	கருத்து தெரிவிக்கப்பட வில்லை.	சேதனப் பசளை உற்பத்தியை அதிகரித்துக் கொள்வதற்கு மேற்படுத்தல் நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்படல் வேண்டும்.

3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	வீதி விளக்கு தூண்களுக்கு முறையான பிரகாரம் இலக்கமிட்டு அதன் பிரகாரம் பதிவேடுகளுக்கு கொண்டு வர வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு மேற்கொள்ளப்படாது இருந்ததுடன் வீதி விளக்குகளின் பாதுகாப்பிற்காக இயலுமான சகல முறையிலும் பொது மக்கள்	வீதி விளக்கு தூண் இலக்கம் இடுவதற்கு தற்போது மேற்கொள்ளப்படுவதுடன் அது முடிவடைந்த பின்னர் வீதி விளக்குகள் பதிவேடு நாளது வரையாக்கப்படும்.	சொத்துக்கள் பதிவேடு நாளது வரையாக்கப்படல் வேண்டும்.

	பொறுப்பாளர் நியமித்து அந்த தகவல்கள் சபையிடம் பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை.		
(ஆ)	சபைக்குச் சொந்தமான 05 காணிகளின் உரித்து மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் கையேற்கப்படாது இருந்ததுடன் அந்த சொத்துக்களுக்காக மீளாய்வாண்டில் ரூபா 154,096 செலவினம் செய்யப்பட்டிருந்தது.	இதில் குறிப்பிடப்பட்ட காணிகளின் நிர்மானிக்கப்பட்டுள கட்டிடம் சபைக்குச் சொந்தமாக இருந்தமையால் அவற்றின் பராமரிப்புக்காக உரிய செலவினம் வருடாந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.. இந்த காணி சபைக்கு கையேற்பதற்கு உரிய நடவடிக்கைகள் தற்போது மற்கொள்ளப்படுகின்றது.	காணி உரித்து கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	சபையினால் பராமரிக்கப்படுகின்ற 50 மயான நிலங்களுக்கு இடையே 33 மயான நிலங்களின் உரித்தை கணக்காய்வுத் திகதி வரையிலும் சபைக்கு கையேற்கப்பட்டிருக்க வில்லை.	50 மயான நிலங்களைக் கையேற்பதற்கு கோரிக்கை சமர்ப்பிக்கப்பட்டதுடன் உரிய அளவிடல் நடவடிக்கைகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. தற்போது 17 மயான நிலங்கள் கையேற்கப்பட்டு முடிவடைந்துள்ளது. எஞ்சியவை அவற்றின் பிரதேச செயலாளர்களிடம் இருந்து கையேற்பதற்கு மிகுதி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது.	காணி உரித்தைக் கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஈ)	சொத்துக்கள் முகாமைத்துவம் மற்றும் பராமரித்தல் தொடர்பாகக் காணப்படுகின்ற திட்ட முறைமை நிறுவனத்தின் தலைவர் அல்லது ஏனைய பொறுப்பு வாய்ந்த மேற்பார்வை உத்தியோகத்தரால் அவ்வப்போது தனிப்பட்ட ரீதியில் கண்டறிந்து தேவையான சரிசெய்தல்கள் மேற்கொள்ள வேண்டியிருந்த போதிலும் அவை தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.	சொத்துக்கள் பராமரிப்புக்காக வேலைப் பிரிவின் மூலம் வாகன பராமரிப்புத் திட்டமும், காணி கட்டிட பராமரிப்புத் திட்டமும் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. பராமரிப்பு நடவடிக்கைகள் அவ்வப்போது மேற்பார்வைக்காக முற்படுத்தப்படுவதுடன் எழுத்து மூல ஆவணங்களின் மூலம் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	சொத்துக்கள் முகாமைத்துவம் மற்றும் பராமரிப்பு முறைமையினை தயாரித்து அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.5 ஒப்பந்த நிர்வாகத்தில் குறைபாடுகள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
மீளாய்வாண்டின் ரூபா 2,800,000 பெறுமதியில் நிறைவேற்றுவதற்கு திட்டமிடப்பட்ட பாதீடு செய்யப்பட்ட வேலைகளில் 14 வேலைகள் பூர்த்தி செய்யப்படாமல் காணப்பட்டது.	சபையின் நிதி நிலைமையின் அடிப்படையிலும் கிராமிய வீதி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழும் பாதீடு செய்யப்பட்ட வேலைகள் அதிகளவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.	பாதீட்டு எல்லையை அடிப்படையாகக் கொண்டு திட்டங்கள் தயாரிக்கப்படல் வேண்டும்.

3.6 மனிதவள முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 06 வெற்றிடங்களும் 01 மிகையும் காணப்பட்டதுடன் வெற்றிடங்களை நிரப்புவதற்காக ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினை விஞ்சி அமைய மற்றும் நாளாந்த ஒப்பந்தம் அல்லது நாளாந்தப் படிகள் அடிப்படையில் சேர்க்கப்பட்ட 08 ஊழியர்களுக்காக மீளாய்வாண்டின் போது சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 1,805,148 செலுத்தப்பட்டிருந்தது.	இரண்டாம் தரத்தின் பதவி வெற்றிடங்கள் தொடர்பாக வடமேல் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் மூலம் உரிய நியமனம் மற்றும் ஒழுக்காற்று அதிகாரத் தரப்பினருக்கு அறிவிக்கப்பட்ட போதும் உரிய உத்தியோகத்தர்கள் இந்த அலுவலகத்திற்கு நியமிக்கப்படாது இருந்தமை மற்றும் முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இலக்கம் 01/2020 இன் பிரகாரம் வெற்றிடங்களுக்காக ஆட்சேர்ப்பினை மேற்கொள்ளுதல் மீண்டும் அறிவிக்கப்படும் வரை கைவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என அறிவிக்கப்பட்டமையால் ஆரம்ப தரத்தின் வெற்றிடங்களுக்காக ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்படவில்லை.	முகாமைத்து சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தின் அடிப்படையில் ஆட்சேர்ப்பினை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	ஒழுக்காற்று விரோத செயற்பாடுகளை மேற்கொண்டதன் காரணமாக 2022 ஆம் ஆண்டின் நவம்பர் மாதம் வேலை நீக்கத்திற்கு உட்பட்ட ஊழியர் தொடர்பாக உரிய விசாரணை நடவடிக்கைகள் 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் முடிவடைந்திருக்கவில்லை.	ஒழுக்காற்று எதிர்ப்பு செயற்பாடுகளை மேற்கொண்டதன் காரணமாக வேலை நீக்கத்திற்கு உட்பட்ட ஊழியரின் விசாரணை நடவடிக்கைகளுக்கு உரிய முறையான ஒழுக்காற்று பரிசோதனை ஒன்றை நடாத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	விசாரணை நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்ளுதல் வேண்டும்.

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
2024 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த திட்டங்களின் இலக்கை அடைந்து கொள்ளும் செயல் முன்னேற்றம் கால ரீதியில் மீளாய்வு செய்யப்படாது இருந்ததுடன் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட பிரதான 19 செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே 10 செயற்பாடுகளில் அடைந்து கொள்ளப்பட்ட செயல்முன்னேற்றம் 50 சதத்தை விட குறைவான மட்டத்தில் காணப்பட்டது.	கருத்து தெரிவிக்கப்பட வில்லை.	செயற்திட்டங்களை திட்டமிடும் போது சரியான அடிப்படையில் திட்டங்கள் தயாரித்து அமுல்படுத்தப்படல் வேண்டும்.

4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மீளாய்வாண்டின் 06 வருமான விடயங்களில் மதிப்பீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானத்திற்கு இடையே 15 சதவீதம் முதல் 125 சதவீதம் வரையிலும், 05 செலவின விடயங்களில் மதிப்பீடு செய்யப்பட்ட நிதியேற்பாடு மற்றும் உள்ளபடியான செலவினங்களுக்கு இடையே 50 சதவீதத்தை விட அதிகரித்த முரண்களும் காணப்பட்டது. அதன் பிரகாரம் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுபாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்க வில்லை.	ஆண்டின் போது இந்த 2025 இல் குறைபாடுகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	பாதீட்டை ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்துதல் வேண்டும்.
(ஆ)	மீளாய்வாண்டில் பாதீடு செய்யப்படாத 38 வேலைகளுக்காக ரூபா 15,606,470 செலவினம் செய்து பூர்த்தி செய்யப்பட்டிருந்தது.	கிராமிய வீதி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பிரதேச செயலகத்தின் மூலம் முன்மொழிவுகள் கோரப்பட்டமையினால் அந்த வேலைகள் பாதீடு செய்யப்படமுடியாது இருந்ததுடன் பாதீடு செய்யப்பட்ட சில வேலைகள் அந்த பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ளது.	பொருத்தமான அடிப்படையில் திட்டங்கள் தயாரிக்கப்படல் வேண்டும்.

4.3 நிலைபேறான அபிவிருத்தி நோக்கம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் நிகழ்ச்சி நிரல் 2030 தொடர்பாக சபை அறிந்திருக்கவோ அல்லது கவனம் செலுத்தாமலோ இருந்ததுடன் ஆண்டின் போது கைப்பற்றுவதற்கு 2030 இல் எதிர்பார்க்கப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை இனங்கண்டு அதற்கான நோக்கங்கள், இலக்குகள் மற்றும் குறிகாட்டிகள் ஸ்தாபிக்கப்பட்டிருக்க வில்லை.	நிலைபேறான அபிவிருத்தி தொடர்பாக ஐக்கிய நாடுகளின் 2030 இன் நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் 2025 ஆம் ஆண்டு முதல் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன் 2030 ஆம் ஆண்டின் போது கைப்பற்றுவதற்குரிய சரியான நேரம் மற்றும் பிரதேசத்திற்கு பொருத்தமான நோக்கங்கள் இலக்குகள் மற்றும் குறிகாட்டிகள் இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை ஸ்தாபித்து அந்த இலக்குகளை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.